# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1834/39 - 2013 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2013.11.01

*1834/39 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல: புத்/சு/09/19

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில், புத்தளம் பத்து மற்றும் கர்வேட்ஸ் சிறு பிரிவில், இல.616, சேனைகுடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் உள்ள, புத்தளம் நகர சபை எல்லைக்கு உட்பட்ட வட்டார இல.3, சேனைகுடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள, புத்தளம் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 28.11.2012 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல.பு.5107 இல் துண்டு இல.01 - 07 வரை விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0297 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஏழு (07) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :-

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர்: சேனைகுடியிருப்புத்தோட்டம்; விபரம்: நிரந்தரக் கட்டிடத்தின் இரண்டு பகுதி காணப்படுகின்றன; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: வீ.எஸ்.டீ.சிறியானி, புத்தளம்; விஸ்தீரணம்: 0.0037 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**
காணியின் பெயர்: சேனைகுடியிருப்புத்தோட்டம்; விபரம்: நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கிறிஸ்ரினா அன்சலின், புத்தளம்; விஸ்தீரணம் : 0.0011 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 03**
காணியின் பெயர்: சேனைகுடியிருப்புத்தோட்டம்; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: உரிமை கோருபவர் தெரியவில்லை; அத்துமீறிக் குடியிருப்பவர்: கிறிஸ்ரினா அன்சலின், புத்தளம்; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 04**
காணியின் பெயர்: – ; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); உரிமை கோருபவர்: உரிமை கோருபவர் தெரியவில்லை; ஆரம்ப உரிமை கோருபவர்: விஸ்தீரணம்: 0.0048 ஹெக்டயார்.

05. **துண்டு இல. 05**
காணியின் பெயர்: சேனைகுடியிருப்புத்தோட்டம்; விபரம்: நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: உரிமை கோருபவர் தெரியவில்லை; அத்துமீறிக் குடியிருப்பவர்: எச்.பியவதி; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்.

06. **துண்டு இல. 06**
காணியின் பெயர்: சேனைகுடியிருப்புத்தோட்டம்; விபரம்: நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எச்.பியவதி, புத்தளம்; விஸ்தீரணம்: 0.0124 ஹெக்டயார்.

07. **துண்டு இல. 07**
காணியின் பெயர்: – ; விபரம்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை); உரிமை கோருபவர்: உரிமை கோருபவர் தெரியவில்லை; ஆரம்ப உரிமை கோருபவர்: – ; விஸ்தீரணம்: 0.0074 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு புத்தளம் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்த பதிவிறக்கம் செய்ய முடியும்.

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம்.ஆர்.எம்.மலிக்,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2013, ஒற்றோபர் 28.

11-603

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல: 120/13/1/52
காணி அமைச்சின் குறிப்பு இல. 4/3/6/2011/எச்டபிளியு/112

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை/ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்த)சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் அல்லது ஆட்சி உரிமையின் விபரம் :**

அமைவிடம்: கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துபிட்ட பத்துவை -வடக்கு சிறு பிரிவில் உள்ள, பிசோவெல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட 16.06.2013 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. கே. 3439 இல் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0024 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணியின் பெயர் பின்வருமாறு:

வரைபட இல: ஆ.வ.கே.3439

துண்டு இல. 1
காணியின் பெயர்: லெய்மேஹேன, விஸ்தீரணம் 0.0024 ஹெக்டயார்.
உரிமை கோருபவர்: கே.ஏ.ஏ.றோஹண, பிசோவெல, கலிகமுவ நகரம்.

மேற்குறித்த காணிக்கு/ஆட்சி உரிமை எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கலிகமுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே.பீ.பெரேரா,
பிரதேச செயலாளர்,
கலிகமுவ பிரிவு.

பிரதேச செயலகம்,
கலிகமுவ,
2013, ஒற்றோபர் 11.

11-604

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.